# இயேசுவின் கடைசி வார்த்தைகள்: வெளிப்படுத்துதல் புத்தகம் - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு சுமார் பாதி கிறிஸ்தவர்கள் தங்கள் நாட்களுக்குள்ளாக இயேசு இந்த பூமிக்கு திரும்பி வருவார் என நம்புகிறார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்து எதிர்காலத்தை பற்றி கிறிஸ்தவ சபைகளுக்கு சொன்ன வார்த்தைகளை கொண்டிருக்கிறது. உபத்திரவ காலத்தின் போது பூமியில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை பற்றியும், சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும், அந்திகிறிஸ்துவின் நிலை, கள்ள மார்க்கத்தின் நிலைகளை பற்றி சொல்லியிருக்கிறார். மேலும் அர்மகெதொன் யுத்தத்தின் போது என்ன நடக்கும் என்று சொல்லியிருக்கிறார், இரண்டாம் வருகையின் போது என்ன நடக்கும், அவருடைய ஆயிரவருட அரசாட்சி, இறுதி நியாயத்தீர்ப்பு, நித்தியத்தில் தேவன் தமது ஜனத்திற்கு திட்டமிட்டிருக்கும் அனைத்தையும் இதில் பதிவு செய்திருக்கிறார். இந்த தொடரில், வெளிபடுத்தின விசேஷத்தின் ஒவ்வொரு அதிகாரமாக விளக்கி சொல்ல இருக்கிறோம் அதினால் தேவன் எதிர்கால நிகழ்வுகளை பற்றி சொல்லியிருப்பவைகளை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

எனது விருந்தினர்கள்: Dr. எட் ஹின்ட்சன், லின் லிபர்டி பல்கலைகழகத்தின் ஸ்கூல் ஆப் ரிலிஜியன் மற்றும் மதங்களை பற்றிய பிரிவின் விரிவுரையாளர், நாற்பதிற்கும் மேலான புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

Dr. மார்க் ஹிட்ச்காக் டல்லாஸ் இறையியல் செமினரியில் வேதாகமத்தை விவரித்தல் பிரிவின் துணை பேராசிரியராக இருக்கிறார். இவர் வேதாகம தீர்க்க தரிசனங்கள் என்ற தலைப்பில் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார், இவர் விசுவாச வேதாக திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார்.

Dr. ரான் ரோடாஸ் ஐவரும் டல்லாஸ் இறையியல் செமினரியில் போதனை செய்கிறார், இவர் தேவ வசனங்கள் ஊழியத்தின் சிறப்பு தலைவராகவும் இருந்து வருகிறார். இவர் தீர்க்கதரிசனம் என்ற தலைப்பில் 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இந்த சிறப்பு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. நான்தான் ஜான் அன்கெர்பெர்க், என்னுடன் மூன்று அருமையான விருந்தினர்கள் உள்ளனர் உங்களுக்கும் அறிமுகமானவர்கள் தான்: Dr. எட் ஹின்ட்சன், Dr. மார்க் ஹிட்ச்காக் மற்றும் Dr. ரான் ரோடஸ். சரி இப்ப, எட், இந்த அருமையான புத்தகமான வெளிபடுத்தின விசேஷத்தில் என்ன

பார்த்தோம் என்பதை சுருக்கமாக சொல்லும்படி விரும்புகிறேன். தேவனே நமக்கு அருளியிருக்கும் அற்புதமான தகவல்கள் இவை. இவை இயேசு சபைக்கு கூறிய இறுதியான வார்த்தைகள். இங்கிருந்து தொடர்ந்து பார்க்க இருக்கிறோம். நாம எங்க இருக்கோன்னு சொல்லுங்க.

**டாக்டர் எட் ஹிந்த்சன்**:..முதலாம் அதிகாரத்தில் உயிர்த்தெழுந்த கிறிஸ்து யோவானுக்கு பத்மூ தீவில் தரிசனமாகி, வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதும்படியாக கட்டளை கொடுக்கிறார். அதிகாரங்கள் 3 மற்றும் 3, இயேசு ஆசியாவில் அமையப்பட்டிருக்கும் ஏழு சபைகளுக்கும் சொல்லுகிற செய்திகளாக கடிதங்களாக இருக்கிறது. அடுத்து நான்காம் அதிகாரத்தில் மொத்த காட்சியும் வித்தியாசமாக மாறுகிறது. இதற்கு பிறகு யோவான் சொல்கிறார், "பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலை கண்டேன், இயேசுவின் சத்தம் என்னிடம் சொல்லக்கேட்டதாவது, "இங்கே ஏறி வா, இவைகளுக்கு பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்கு காண்பிப்பேன் என்று விளம்பினது." நான்காம் அதிகாரத்தில் யோவான் பரலோகத்தின் சிங்காசனம் இருக்கும் அறைக்கு செல்கிறார், வர்ணிக்க முடியாத அந்த நிலையை வர்ணித்து கூற முயலுகிறார். பிதாவாகிய தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார், மகா பெரிய மகிமையின் ஒளி, சிங்காசனத்தை சுற்றிலும் பிரகாசமாக ஜொலிக்கும் வானவில், முன்பாக கண்ணாடி கடல் இருந்தது. தேவனிடம் நெருங்க முடியாத

ஒரு நிலையை பாருங்க. எப்படி தேவனிடம் போக முடியும்? எப்படி அந்த சிங்காசனத்தினிடம் போக முடியும்? அவருடைய முகத்தை எப்படி பார்க்க முடியும்? வேதம் சொல்கிறது நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தைரியமாக சிங்காசனத்தண்டைக்கு சேரக் கடவோம். நான்காம் அதிகாரத்தில் பிதாவாகிய தேவனை வான சேனை அனைத்தும் அவரே பிரபஞ்சத்தை உண்டாக்கியவர் என்று தாள விழுந்து தொழுதுகொள்ளுகிறார்கள்.

ஐந்தாம் அதிகாரத்தில் பெரிய பிரச்சனை அறிமுகப்படுத்தப்படுகிறது. பிதாவாகிய தேவனுடைய கரங்களில் இருக்கிற முத்திரைகளுடன் இருக்கும் ஏழு சுருள்கள். அதை உடைக்க பாத்திரமானவர்கள் யாருமே இல்லை, அதை வாசிக்கவும், நியாயத்தீர்ப்பை பிரகடநிக்கவும், பூமியின்மேல் பரலோக ராஜ்யத்தை கொண்டு வரவும் யாருமில்லை. ஆட்டுக்குட்டியானவர் எழுந்தருளின போது பிரச்சனை முடிவுக்கு வருகிறது. பரலோக சேனை முழுவதும் தேவ ஆட்டுகுட்டியானவராகிய இயேசுவுக்கு முன்பாக விழுந்து தொழுது கொள்ளுகிறார்கள். இந்த அதிகாரங்களில் இயேசுவினுடைய தெய்வத்துவம் வெளிபடுத்தப்பட்டு இருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தின் முழு நோக்கமும் நம் கவனத்தை அவர் பக்கம் ஈர்ப்பதுதான். அதுதான் இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்பாடு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா.  அடுத்து வருவது பரலோகத்தில் மிகப்பெரிய காரியமாக இருக்கும் என்று தான் வெளிப்படுத்தின

விசேஷம் நமக்கு கூறுகிறது. ஆனா அந்த மிகப்பெரிய பிரச்சனையை பற்றி பேசுவதற்கு முன்பு, அது என்ன எப்படி சரியானது, என்றும் பார்க்கும் முன் இன்னும் சொல்லப்படாத இன்னொரு விஷயத்தை பார்க்கலாம்: அதாவது முதல் மூன்று முதல் நான்கு அதிகாரங்களில் இருந்து தொடர்ந்து வேறு சில இடங்ளிலும் இருபத்தி நான்கு மூப்பர்களை பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. சிங்காசனத்திற்கு முன்பாக வெள்ளை அங்கி தரித்தவர்களாக அமர்ந்திருக்கும் இருபத்தி நான்கு மூப்பர்களை பற்றி மிகப்பெரிய விவாதங்கள் நடந்துகொண்டே இருக்கிறது, இவர்கள் யார். ரான், பலதரப்பட்ட கண்ணோட்டத்தை விளக்கிடுங்கள், எதை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**..சரி, ஒரு கண்ணோட்டத்தின்படி அவர்கள் தூதர்கள். இது மக்கள் இடைய பிரபலமான கருத்தாக கருதப்படுகிறது. ஆனால் இது சரியான கண்ணோட்டம் கிடையாது ஏன்னா அது வர்ணிக்கப்பட்டிருக்கும் விதம் அப்படி. உதாரணமாக, அவர்களை மூப்பர்கள் என்கின்றனர். மனிதர்களை தான் மூப்பர்கள் என்று அழைப்பதை பார்க்கிறோம், ஆனா வேதாகமத்தில் எங்கையும் தூதர்கள் மூப்பர்கள் என்று அழைப்பது இல்லை. மேலும், இந்த, வெளிப்படுத்தின விசேஷம் முழுவதிலும் தூதர்கள் மூப்பர்கள் என்று வகையறுக்கப்பட்டு சொல்லப்படுவதை பார்க்கிறோம். இதற்கு என்ன அர்த்தம் என்றால் மூப்பர்கள் என்பவர்கள் தூதர்கள் அல்ல. அதுமட்டுமல்ல, மூன்றாவது, வெளிப்படுத்தல் 5:9 ல மீட்டின் பாடல் ஒன்று இருக்கிறது அங்க,

அதாவது, மனிதர்கள் இந்த மீட்பின் பாடலை பாடுவது தான் பொருத்தமாக இருக்கும், ஆனால் இதை தூதர்கள் செய்தால் ஏற்ப்புடையதாக இருக்காது, ஏன்னா அவர்களுக்கு இதுல எந்த பங்கும் இல்லை. அதனால இவங்க தூதர்களாக இருக்க மாட்டாங்கன்னு நினைக்கிறேன்.

வேறு சிலர் இதை சபை என்றும் இஸ்ரவேல் என்றும் சொல்கிறார்கள். இந்த கண்ணோட்டத்தில் இருக்கிற பிரச்சனை என்னன்னா, அதாவது, தானியேல் 12ன்படி இஸ்ரேலானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைக்கும் உயிர்த்தெழவோ பலனை பெறவோ போவது இல்லை.

இதுதான் நம்முடைய கண்ணோட்டத்திற்கு நடத்துகிறது, அதாவது இது சபைதான். இருபத்தி நான்கு மூப்பர்களும் சபையை பிரதிபலிக்கிறார்கள். இதை பின்வரும் காரணங்களினால் உறுதியாக சொல்ல முடியும். வெளிப்படுத்தல் மூன்று மற்றும் நான்கில் ஏழு சபைகளுக்கு சொல்லப்படும் பலன்களை பார்க்கும்போது, அந்த பலன்களில் சிலதை கவனிக்கும்போது அதில் கிரீடம் அணிவதும், சிங்காசனத்தில் வீற்றிருப்பதும், வெள்ளை அங்கி தரித்துகொள்வதும் சொல்லப்பட்டு இருக்கிறது. சரி, இந்த இருபத்தி நான்கு மூப்பர்களும் இந்த காரியங்களால் வர்ணிக்கப்படுகிறார்கள். அதனால இந்த பகுதி சபையை தான் குறிக்கிறது என்பதை புரிந்துகொண்டேன்.

இதை குறித்த இன்னொரு சுவாரஸ்யமான காரியமும் இருக்கிறது. இது உபத்திரவத்திற்கு முந்தைய காலம் என்ற கண்ணோட்டத்தோடு பொருந்துகிறது, அதாவது உபத்திரவத்திற்கு முன்பு எடுத்துகொள்ளப்படுதல் உண்டாகும் என்ற கருத்து. இந்த கண்ணோட்டத்தை உபத்திரவத்திற்கு பிறகு சொல்ல முடியாது, ஆனா உபத்திரவ காலத்திற்கு முன்பு என்றால் பொருந்தும். அதோட ஏன் இருபத்தி நான்கு என்று கேட்டால், அந்த, இருபத்தி நான்கானது கிறிஸ்துவின் சரீரத்தை குறிக்கிறது அதாவது, சபை முழுவதையும் குறிக்கிறது. இதை 1 நாளாகமம் இருபத்தி நான்கில் பார்க்கிறோம் அங்கு ஆசாரியர்களின் இருபத்தி நான்கு நிலைகள் சொல்லப்பட்டு இருக்கிறது. மேலும், அதோடுகூட, வெளிபடுத்தின விசேஷத்தில் நாம் ராஜ்யத்தின் ஆசாரியர்கள் என்று அழைக்கப்படுகிறோம். அதனால் இது அருமையாக ஒத்துபோவதாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. சொல்லுங்க, மார்க், இங்க மிக முக்கியமான ஒன்று இருக்கு, இல்லையா? அதாவது, வேதம் சொல்கிறது, “நான் கண்டேன்” 5ம் அதிகாரம், “சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருடைய வலது கரத்தில் பிடித்திருக்க கண்டேன்,” இது தேவனைதான் குறிக்கிறது, “உள்ளும் புறமும் எழுதப்பட்டிருந்த சுருள்கள், முத்திரை போடப்பட்டிருந்த ஏழு முத்திரைகள். அதற்கு பிறகு மிகுந்த சத்தமிட்டு பேசின பலமுள்ள தூதனை கண்டேன் அவன், “புஸ்தகத்தை திறக்கமும் முத்திரையை உடைக்கவும் பாத்திரவான்

யார் என்றான்.” இப்பதா, பெரிய பிரச்சனை காணப்படுகிறது. வானத்திலாவது, பூமியிலாவது பூமியின் கீழாவது ஒருவனும் அந்த புஸ்தகத்தை திறக்கவும் அதை பார்க்கவும் கூடாதிருந்தது.” இப்ப யோவான், இதை புரிந்துகொண்ட, இந்த புஸ்தக சுருளை திறக்க யாருமே இல்லை என்று சொல்லி பரலோகத்தில் இவர் அழ ஆரம்பிக்கிறார். முதலாவதாக, இந்த புஸ்தகம் என்ன ஏழு முத்திரைகள் என்ன? இதுல நிறைய ஆய்வுகளை செய்திருக்கீங்க, இது என்னது?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...சரி, இந்த சுருள் இருபுறமும் எழுதப்பட்டு இருந்தது, அதுதான் இதை முக்கியமானதாக்குகிறது. அந்த நாட்களில் எல்லா ஆவணங்களும் பொதுவாக இருபுறமும் எழுதப்பட்டு இருக்காது. அது எப்படி இருந்தாலும் சரி, முக்கியமானதுதான். அதில நிறைய தகவல்கள் அடங்கியிருந்தது. அந்த சுருளை பற்றி பலவிதமான வித்தியாசமான கண்ணோட்டங்கள் கொடுக்கப்பட்டது. சிலர் அதை புதிய உடன்படிக்கையின் புத்தகம் என்கிறார்கள். சிலர் மீட்பின் புத்தகம் என்று நினைக்கிறார்கள், ஆட்டுக்குட்டியின் ஜீவ புஸ்தகம் என்கிறார்கள்; இந்த பூமியை பற்றிய முக்கிய பத்திரம் , அது நியாயத்தீர்ப்புகளின் பட்டியலை கொண்டது, என்றும் சிலர் அதை புதிரான சுருள் என்றும், மனிதனுடைய பாவங்களின் பதிவு என்றும் சொல்கின்றனர். இந்த கருத்துகளுக்கு பஞ்சமே இல்லை.

ஆனா ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட அந்த காலத்து ஆவணங்கள் என்றால், ஏழு முத்திரைகளால முத்தரிக்கப்பட்ட ஆவணம் என்று அந்த காலத்தில் சொல்லப்படுவது உயில் அல்லது ஏற்பாடுகள் தான். அப்படி பார்த்தா இது என்ன; இது ஒரு சொத்தாக இருக்குது. ஒரு உயில். இதை தான் சங்கீதத்தில் சொல்லியிருக்க பார்க்கிறோம், "என்னை கேள் அப்பொழுது ஜாதிகளை உனக்கு சுதந்தரமாக கொடுப்பேன்." அப்படின்னா இதுல இந்த உலகத்திற்கான சொத்து உண்மையாக அடங்கியிருக்கிறது.

மேலும் யோவான் அழுவதற்கு காரணம் பிதாவின் வலது கரத்தில் இருக்கிற அந்த சுருளை வாங்கலும் அதை திறக்கவும் பாத்திரமானவர்கள் ஒருவரும் இல்லை என்பதுதான், இந்த சுருள் திறக்கப்படாவிட்டால் தேவன் இந்த உலகத்திற்கும் மனுகுலத்திற்கும் வைத்திருக்கும் நோக்கம் முழுமையடையாது என்பதை அவன் புரிந்துகொண்டான். ஏன்னா தேவனுடைய நோக்கமே தமது மேசியா திரும்ப வந்து இந்த பூமியை ஆளுவதுதான். இப்ப இயேசு சுருளை எடுத்ததும் அவர் அதற்கு பாத்திரமானவர் என்று தெரிந்ததும், பரலோகமே மகிழ்ச்சியினால் நிறைந்து கொண்டாடுகிறது. அங்கு அருமையாக இருக்கிறது, ஏன்னா இந்த புஸ்தகத்தை திறக்க பாத்திரமானவர் முன்பாக வந்தார் என்கிறது, அவர் பாத்திரவானாக இருக்க காரணம், என்னன்னா, "ஏனென்னில் நீர் அடிக்கப்பட்டு, எங்களை தேவனுகேன்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டு கொண்டீர்."

ஆகவே இயேசு, தமது மரணத்தின், மூலம் அவர் அந்த சுதந்திரத்தை எடுத்துக்கொள்ள பாத்திரனாகும்படி மரணத்தின் மூலம் பாவத்திற்கான விலையை செலுத்தி இருக்கிறார். அதனால நமக்கு என்ன நடந்தது, என்பதை வெளிப்படுத்தின விசேஷத்தில் பார்க்க முடியும், இந்த புஸ்தகம் திறக்கப்படுகிறது.

ஆறாம் அதிகாரத்தில் அந்த முத்திரைகள் திறக்கப்படுவதை பற்றி பார்க்க இருக்கிறோம். அடுத்து எட்டாம் அதிகாரத்தின் ஏழாவது முத்திரையில் ஏழு எக்காளங்கள் அடங்கியிருக்கிறது. அடுத்ததாக பதினாறாம் அதிகாரத்தில், ஏழாவது எக்காலத்தில் ஏழு கலசங்கள் அடங்கியிருக்கிறது, இறுதியாக அந்த முத்திரை திறக்கப்பட்ட பிறகு இயேசு மீண்டும் இந்த பூமிக்கு வரும் மகிமையான வருகை இருக்கும் அதிகாரம் 19, அவருடைய ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும், எல்லா வாக்குத்தத்தங்களும் நிறைவேறும். அவர் தமது சுதந்தரத்தை பெற்றுகொள்வார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: எட், இதை பத்தி நாம பேசனுன்னு நினைக்கிறேன். இங்க இயேசுவை பற்றி வர்ணிக்கப்பட்டிருக்கும் அடையாளங்கள். அவர் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் என்று இருக்கு. அவர் பிதாவிடம் இருந்து அந்த புஸ்தகத்தை வாங்கும்போது பரலோகமே பாட ஆரம்பிக்கிறது, “இவர் பாத்திரர்.” அதாவது இதுல, “அடிக்கப்பட்ட ஆட்டுகுட்டியானவே வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும்

மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற பாத்திரமாயிருக்கிறார் என்றனர்." சரி, இது எதுக்கு.... இங்க நிறுத்தி பார்க்கவேண்டியது அவசியம். ஒருவேளை வேத பாட வகுப்பில் இருந்திருந்தால் இதை பற்றி பேசும்போது, புஸ்தகத்தை எடுக்க இயேசு பாத்திரர் என்பதன் அர்த்தம் என்ன என்று கேட்டிருப்போமே?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**..இயேசு இரத்த்தம் சிந்தின ஆட்டுக்குட்டியாக காணப்பட்டதால், அந்த அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக அவரை கண்டதினால், யோவான் கண்களில் கண்ணீர் நிறைந்து கண்டான் இப்போது கிறிஸ்து சிங்காசனத்தில் வீற்றிருப்பதை, பிதாவோடு சரிசமமாக வீற்றிருப்பதை பார்க்கிறான். இந்த அதிகாரம் கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை நமக்கு உரத்த சத்தமிட்டு கூறுவதாக இருக்கிறது. அதிகாரம் நான்கில் தூதர்களின் கூட்டமானது, சேராபீம் போன்றவர், சத்தமிடுகின்றன, "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்," மூன்று முறை திருத்துவ தேவனை குறிக்கிறது. இந்த புத்தகம் எழுதப்பட்ட கிரேக்க புதிய ஏற்பாட்டில் பரிசுத்தர் என்ற வார்த்தையானது, "ஹகியோஸ், ஹகியோஸ், ஹகியோஸ், என்றும் பாத்திரர் என்ற வார்த்தை, அக்சியோஸ்" என்றும் உள்ளது. இந்த இரண்டு வார்த்தைகளையும் அதிக அழுத்தமாக உள்ளது. இது கிரேக்க பதங்கள் போல தோன்றுகிறது. நாம் பாத்திரவானாக கருதும்படியான பாத்திரம், நம்முடைய ஆராதனையை, பெறக்கூடிய பரிசுத்தவான். தெய்வீகமாணவர் ஒருவர் மட்டுமே இந்த புஸ்தக சுருளை எடுக்க

பாத்திரமானவராக இருக்கிறார், அவர் தான் அதை திறந்து, நியாயத்தீர்ப்புகளை பிரகடனிக்க முடியும். இயேசுவே ஆராதனைக்கு பாத்திரர். ஐந்தாம் அதிகாரத்தின் இறுதியில் பரலோகமே அவர்க்கு முன்பாக பணிந்து இரட்சகராகிய தேவனை தொழுது கொள்ளுகிறார்கள்.

வெளிப்படுத்தல் நான்கு ஐந்தை வாசிக்கும்போது கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை தவரிட முடியாது. அந்த பக்கங்கள் முழுவதும் இதுதான் நிறைந்திருக்கிறது. இது பிற்காலத்தில் சபை வரலாற்றில் உண்டாக்கப்பட்ட கட்டுக்கதை அல்ல. இல்ல, இது துவக்கத்தில் இருந்தே புதிய ஏற்பாட்டின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. தேவனாகிய அவர் மனித அவதாரம் எடுத்து, பாவமற்ற இரட்சகர் நமது பாவங்களுக்காக மரித்து, மரணத்தில் இருந்து உயிர்த்தவர், அவர்தான் மீண்டும் வரவும் ராஜாதி ராஜாவாக கர்த்தாதி கர்த்தராக இருக்கவும் பாத்திரமானவராக இருக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி, தேவன் வெளிப்படுத்தின விசேஷத்தில் வெளிப்படுத்தியிருக்கும் பிரம்பாண்டமான காரியங்களை குறித்து பார்த்துகொண்டு இருக்கிறோம். நிகழ்ச்சியை துவங்குவதற்கு முன்பு முக்கியமான ஒரு காரியத்தை பற்றி நீங்க சொல்லீட்டு இருந்தீங்க. அதாவது வெளிப்படுத்தலில் பரலோகத்தில் என்ன நடக்கிறது என்பதை பற்றியும் அதே சமயத்தில் பூலோகத்தில் சம்பவிப்பவைககளை பற்றி தொடர்ந்து சொல்லப்பட்டு இருக்கிறது; பரலோகத்தில் என்ன

நடக்கிறது, பிறகு பூலோகத்தில் என்ன நடக்கிறது. அதை பற்றி சொல்லுங்க.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...சரி, சொல்றேன். இந்த வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இந்த மாதிரி தான் இருக்கு பரலோகத்தில் நடப்பவைகளின் காட்சி, பூலோகத்தில் நடக்கிறவற்றின் காட்சிகள். இதை மிக அழகாக நான்கு மற்றும் ஐந்தாம் அதிகாரங்களில் சொல்லியிருப்பதை பார்க்க முடியும் அதற்கு பிறகு ஆறாம் அதிகாரத்திற்கு வருவோம். ஏன்னா நான்கு மற்றும் ஐந்தாம் அதிகாரங்களில் பரலோகத்தில் தேவனுடைய சிங்கானத்தை சுற்றி இருக்கும் அழகை பற்றி பார்த்தோம். தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். மேலும் ஒரு அருமையான ஆராதனை நிகழ்வோடு அந்த அதிகாரம் முடிகிறது. இப்ப ஆறாம் அதிகாரத்தை பார்க்கும்போது அதில் இங்க பூமியில் நடப்பவைகளை பார்க்கிறோம். இங்க ஆராதனையில் இருந்து யுத்தத்திற்கு வருகிறோம். ஆனா இந்த மாதிரி பரலோகம் பூமி என்று அங்கும் இங்கும் நடக்கும் நிகழ்வுகள் தான் இந்த புத்தகத்தில் தொடர்ந்து சொல்லப்பட்டிருப்பதை கவனிக்கிறோம், தொடர்ந்து பரலோகத்தொடு தொடர்பு படுத்தி கொண்டே இருந்து தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் காட்சியை கூறுகிறது. இதிலிருந்து என்ன தெரியுதுன்னா பூமியில் நடக்கிற எல்லா காரியங்களும் பரலோகத்தில் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருப்பதை கூறுகிறது. இந்த காலத்தில்

வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு இது மிகப்பெரிய ஆறுதலாக இருக்கிறது, புதிரான காலமாயிருக்கிறது. இன்றைக்கும் உலகத்தில் நடக்கிற பெரும்பாலான விஷயங்கள் நமக்கு புரிவதில்லை, ஆனால் இங்கு நடக்கிற எல்லா காரியங்களும் பரலோகத்தில் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், சரி, ரான், முதல் முத்திரையை திறக்கலாமா. அது என்னது? வேதம் சொல்கிறது, "நா பார்த்த போது, இதோ, வெள்ளை குதிரையை கண்டேன்; அதிமேல் ஏறியிருந்தவன் வில்லை பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டு இருந்தது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்." (வெளி.6:2) இதுக்கு என்ன அர்த்தம்?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...சரி, அதாவது, நிறைய பேருடைய யூகம் என்னன்னா அவர் வெள்ளை குதிரையில் போறதுனால அது இஎசுவாதான் இருப்பார் என்பதுதான். ஏன்னா வெளிப்படுத்தல் 19ல இயேசு வெள்ளை குதிரையின் மேல் வருவதை பார்க்க முடிகிறது. ஆனா அதுக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைன்னு தான் சொல்வேன். உண்மையில், முதல் நான்கு முத்திரை நியாயத்தீர்ப்புகளும் வெளிப்படுத்தலின் நான்கு குதிரை வீரர்களின் தொடர்பு உடையதாக இருக்கு. அந்த நான்கு குதிரை வீரர்களும் வெளிப்படுத்தலின் நியாயத்தீர்ப்பில் இணைந்து இருக்கிறார்கள் என்பது

உண்மை. இந்த பூமியின் மீது வர இருக்கும் நியாயத்தீர்ப்பு. முதல் முத்திரை திறக்கப்படும்போது, முதல் குதிரையின் மேல் இருப்பவர் இதை செய்து முடிக்கிறார். இரண்டாவது முத்திரை உடைக்கப்படும்போது வெளிப்படுத்தலின் இரண்டாவது குதிரையின்மேல் இருப்பவர் செய்து முடிக்கிறார். எல்லாருமே நியாய்த்தீர்ப்போடு தொடர்பு உடையவர்கள். அதனால இந்த நபர் இயேசு இல்லா ஆனா அந்தி கிறிஸ்துவாக இருக்கிறார்ன். அவன் வந்து ஜெயிக்கிறவனாகவும் ஜெயம் கொள்ளுகிறவனாகவும் இருப்பான். அவன் கையில் அம்பு இல்லாத வில்லை பிடித்திருந்தான். அதற்கு என்ன அர்த்தம் என்றால் யுத்தம் இன்னும் ஆரம்பிக்கவில்லை, ஆனால் அவன் விரும்பினால் அதை நடப்பிக்கும் ராணுவ பலம் அவனிடம் இருந்தது. இதை வைத்து அவன் இஸ்ரேலோடும்  மத்திய கிழக்கு நாடுகளோடும் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி கொள்ள வலிமை கொண்டிருப்பது தெளிவாக புரிகிறது. அவ்வளவு ராணுவ வலிமை அவனிடமுண்டு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. அதாவது இப்ப நாம இங்க, தானியேல் புத்தகத்திற்கு போகிறோம், மேலும் இந்த நிகழ்வை நீங்க அந்தி கிறிஸ்து இஸ்ரவேலோடு செய்கிற உடன்படிக்கைக்கு அடையாளமா சொல்றீங்க, அதாவது ஏழு வருடங்கள் நீடிக்க கூடிய ஒரு சமாதான உடன்படிக்கை பண்ணுவான்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**..ஆமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதை பற்றி மேலும் பார்ப்பதற்கு முன்பு இப்ப நாம, இரண்டாவது முத்திரையை பற்றி பார்க்கலாம் இதுக்கு அப்பறம் அடையாளம் வரும், சமாதானம் போல காட்சியளிக்கிறது, ஆனா அடுத்தது பூமியில் இருந்து சமாதானம் நீக்கப்படுவதை பார்க்கிறோம் இங்க யுத்தம் நடக்கிறது. இங்க என்ன ஆச்சு?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...சரி, இந்த பூமியில் இருந்து சமாதானம் எடுப்பிக்க பட்டது என்றால் அதற்கு முன்பு அங்கு சமாதானம் இருந்திருக்கு. அப்ப அந்தி கிறிஸ்துவின் ஆட்சியில் முதல்ல சமாதானம் இருந்தது. ஆனா இப்ப, வெளிப்படுத்தலின் இரண்டாம் முத்திரையில் வெளிப்படும் இரண்டாவது குதிரையின்மேல் இருப்பவன், பூமியில் இருந்து சமாதானத்தை எடுத்து போடுகிறான். வேதம் இங்கு சொல்லுகிறது, "வேறொரு குதிரை, சிவப்பு நிறம்( ரத்தத்தை குறிக்கிறது) அனுப்பப்பட்டது; அதின்மேல் ஏறி இருந்தவனுக்கு பூமியின் மேலிருந்து சமாதானத்தை எடுத்து போடவும், மனிதர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்திட தூண்டும் அதிகாரமும் கொடுக்கப்பட்டு இருந்தது; அவன் கையில் பட்டயம் கொடுக்கப்பட்டு இருந்தது. (வெளிப்படுத்தல் 6:3). மேலும், இதனோட அர்த்தம் ரொம்ப தெளிவா புரியுது அந்த பட்டயம் உலகம் முழுவதும் செயல்பட போகிறது, உலகத்தில் இருக்கிற மக்களில் செயல்படும்.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**...அதாவது, ஜான், இங்க வெளிப்படுதலின் நான்கு குதிரை வீரர்களும் பின்வரும் அதிகாரங்களில் சன்பவிக்க

போகிரவைகளின் ஒரு முன்னோட்டமாக இருக்காங்கன்னு நினைக்கிறேன். வெளிப்படுத்தின விசேஷம் இது முதல்ல ஒரு முன்னோட்டமா அப்பறம் விபரமாக சொல்லப்பட்ட ஒன்று. சின்ன சின்ன பிம்பங்களா இல்லாம தெளிவா சொல்லக்கூடிய ஒன்னா இருக்குது. அந்தி கிறிஸ்து வந்துகொண்டு இருக்கிறான். யுத்தம் வருகிறது, சிவப்பு குதிரை; கருப்பு குதிரையின் மீது பஞ்சம் வருகிறது; மங்கின குதிரையின் மீது மரணம் வருகிறது.

Dr. **ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. கடைசி இரண்டையும் சொல்லுங்க. இப்ப இங்க கருப்பு குதிரை வருது, நான் பார்த்தபோது, இதோ, ஒரு கருப்பு குதிரையை கண்டேன், அதிமேல் ஏறியிருந்தவன் ஒரு தராசை தன் கையில் பிடித்திருந்தான். அப்போது அந்த நான்கு ஜீவன்களின் மத்தியில் இருந்து உண்டான சத்தத்தை கேட்டேன், "ஒரு பணத்திற்கு ஒருபடி கோதுமை என்றும், ஒரு பணத்திற்கு மூன்று படி வார் கோதுமை என்றும் எண்ணெயையும் திராட்ச ரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும் விளம்பினது." (6:5,6), அதாவது உணவு பொருட்களின் விலை உச்சத்தை எட்டிடுமோ, அப்படியா? அப்படிப்பட்ட நிலையிலும் சிலர் அந்த திராட்ச ரசத்தை வாங்க கூடிய அளவிற்கு செல்வந்தராக இருப்பதால் விலை கொடுத்து வாங்கிடுவார்கள். அப்ப ஐசுவரியவான்கள் இருப்பாங்க, ஆனா உலகத்தின் பெரும்பான்மை ஏழ்மையிலும் பஞ்சத்திலும் மரணத்திலும் தத்தளிக்கும். சரி, இங்கிருந்து சொல்லுங்க.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**...இந்த, யுத்தத்தின் முடிவானது நிச்சயமா மக்களுக்கு ஒரு நாசத்தை உண்டாக்குவதாக தான் இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**...அது பஞ்சத்தை உண்டாக்கும்; அது மரணத்தை உண்டாக்கும். அதற்கு பிறகு தான் இந்த காட்சி நடக்கும், மரணமும் பாதாளமும் அவனை பின்தொடர்ந்தது." இது எப்படி இருக்குதுன்னா மரணம் வருகிற போது பின்னாலயே ஒரு வண்டியும் வந்து எல்லா சடலங்களையும் எடுத்து வீசுகிறது போல இருக்குது. குப்பைகளை சுத்தப்படுத்துவது போல இருக்கு. ஜனங்க சாகிறாங்க. இந்த வெளிப்படுத்தின விசேஷத்தில் பார்க்க கூடிய கடினமான காரியம் இதுதான். ஜனங்கள் ஒருவேளை, "இத, படிக்கும்போது பயமா இருக்குன்னு சொல்லலாம்." இது, பயம்புருத்துவதற்காக எழுதப்படவில்லை, எந்த நேரத்திலும் வரப்போகிற இயேசுவை சந்திக்க நம்மை ஆயத்தப்படுத்துவதாக இருக்கிறது. நீங்க போக ஆயத்தமா இருக்கீங்களான்னு பார்த்துகொள்ளுங்கள், ஏன்னா நீங்க தனியா விடப்பட கூடாதுன்னு விரும்புகிறோம். இது அவிசுவாசிகளுக்கு துற்செய்தியாக இருக்கிறது. ஆனால் விசுவாசிகளுக்கு இது நற்செய்தி; இது அவிசுவாசிகளுக்கு துர்ச்செய்தி.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** மார்க், நான்காவது காரியம் நாம இங்க சொன்னதோடு ஒத்துபோகிறது. இங்க யுத்தங்கள் இருக்கு, அதற்கான

விளைவுகளும் காணப்படுகிறது. வேதம் சொல்கிறது, "நான் பார்த்த போது, இதோ, மங்கின நிறமுள்ள குதிரையை கண்டேன். அதின்மேல் ஏறி இருந்தவனுக்கு மரணம் என்று பேர். பாதாளம் அவன் பின் சென்றது." வசனம் எட்டு. சரி, இதற்கு என்ன அர்த்தம்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...இது, அங்க மிகப்பெரிய அளவுல மரணம் சம்பவிக்கும் என்று கூறுகிறது. அதாவது, இந்த ஒரு நியாயத்தீர்ப்பில் மட்டும் பூமியின் நான்கில் ஒருமடங்கு மரணமடைவார்கள் என்று கூறுகிறது, இப்ப, துரிதமா துல்லியமா பார்க்கும் முன்பு இப்படி இதை புரிந்துகொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன், அதாவது, ஒரு எண்ணிக்கையை வைத்து பார்க்கலாம். ஆனா பூமியின் நான்கில் ஒரு பங்கு என்று இருக்குது. அதாவது, உதாரணத்திற்கு, எடுத்துகொள்ளுதலுக்கு பிறகு, ஆறு பில்லியன் மக்கள் இருப்பாங்க, இல்ல இந்த மாதிரி வைத்துகொள்வோம். அப்படியிருந்தா, இதை வைத்து பார்க்கும், போது அங்க, இந்த நியாயத்தீர்ப்புகளின் படி ஒவ்வொன்றிலும் ஒன்றரை பில்லியன் மக்கள் பூமியில் செத்துபோயிடுவாங்க. இதனுடைய வீரியத்தை நம்மால பார்க்க முடியும். இதை நம்முடைய மனதில் ஏற்றுகொள்வது நமக்கு ஒரு வேளை கடினமா இருக்கும் ஏன்னா, இதுவரைக்கும், தேவனை அன்பான தேவனாகவும் கிருபையும் இரக்கமும் உள்ள தேவனாக பார்த்திருக்கிறோம், அதுதான் அவர். ஆனா தேவன் இந்த பூமியை நியாயத்தீர்க்கும் நாள் வருகிறது, இரக்கமற்ற நியாயத்தீர்ப்பு. அவர்கள்

வாதைகளால் அடிக்கப்படுவார்கள் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது; பட்டயத்தால் வீழ்த்தப்படுவார்கள் என்றும் இருக்கிறது; பூமியின் கொடிய மிருகங்களினால் கொல்லப்படுவார்கள் என்று இருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம் என்று சிலர் யோசிக்க கூடும், :பூமியின் கொடிய மிருகங்கள்". ஆனா பொதுவா இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்ட மற்ற இடங்களை பார்க்கும்போது, "கொடிய மிருகங்கள்' என்பது பூமியை ஆளும் வலிமையான அதிபதிகளை கூறுகிறது. ஆளுகிறவர்களின் செயல்பாடுகள் அப்படிபட்டவைகளாக இருக்கலாம். அந்தி கிறிஸ்துதான் மிருகம் என்று அழைக்கப்படுகிறான். நிச்சயமா அவர்களுடைய செய்கைகளால், அதாவது, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான, மக்கள் பூமியில் மரணத்தை நேருக்கு நேர் சந்திப்பார்கள் என நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அடுத்தது நாம ஐந்தாம் முத்திரையை பார்க்க போகிறோம் இது இரட்சாட்சிகளின் அழுகுரல் கேட்கிறது, அதாவது இவங்க, நீங்க சொன்ன மாதிரி, அதிகாரிகளால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டு இருக்கலாம், அல்லது எடுத்துகொள்ளப்படுதல் இருக்கு என்று சொல்லிக்கொண்டு இருந்ததால் ஏதாவது காரணங்களுக்காக அழிக்கப்பட்டவர்களாக இருக்கலாம், அவங்க தவறாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள், இங்கு கொல்லப்பட்டு இருக்கலாம். ஏதோவொரு காரணத்தினால் இவர்களை பரலோகத்தில் பார்க்கிறோம், " தேவ வசனத்தின் நிமித்தமும் தங்கள் கொடுத்த சாட்சியின் நிமித்தமும்

கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களை பலிபீடத்தின் கீழே கண்டேன்.” இங்க ஆயிரக்கணக்கான மக்கள் இருந்திருப்பாங்க, இல்லையா? எப்ப பழிவாங்க போறீங்கன்னு கேட்க்கிறாங்க. ரான், இங்க என்ன நடக்குது?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...சரி, எண்ணிக்கைக்கு அடங்காத விசுவாசிகள் இரத்த சாட்சிகளாக மரிப்பார்கள். இன்னொன்னு நினைவிருக்கட்டும் இதெல்லாம் பரலோகத்தில் அவங்களுக்கு நல்லா ஞாபகம் இருக்கும். அதாவது, அவர்களுடைய சடலங்கள் பூமியில்தான் இருக்கும், ஆனா அவங்க பரலோகத்தில் தேவனோடு பேசிக்கொண்டு இருப்பார்கள். இது எனக்கு ஒரு விஷயத்தை நியாபகப்படுத்துகிறது, ஜான், இதற்கு பிறகு வரப்போகிற கள்ள மார்க்கத்தை பற்றி நாம பேச போகிறோம் என்று நினைக்கிறேன். இந்த கள்ள மார்க்கமானது இந்த ரத்த சாட்சிகளின் ரத்தத்தை குடிக்கும். அப்ப இந்த கள்ள மார்க்கமானது, அது எதுவானாலும் சரி, நிச்சயம் உண்மையான விசுவாசிகளை அது மரணமடைய செய்திடும். அதாவது, அவங்க எல்லாரையும் தாங்குவாங்க எல்லாரையும் சேர்த்துக்கொண்டு எல்லாரையும் நேசிப்பாங்க - ஆனா இயேசுவை கிறிஸ்துவின் உண்மையான விசுவாசிகளை தவிர. அதனால இந்த இடத்துல சொள்ளப்ப்படும்விதமாக கொல்லப்போகிறவர்கள் யார் என்று யோசித்தால் அது இவர்களுக்கு சரியாக பொருந்துவதாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஒரு அருமையான விஷயத்தை இங்க வெளிப்படுத்த போறீங்கல்ல, அதாவது நீங்க இந்த வெளிப்படுத்தின விசேஷம் கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தி என்றும் கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு துர் செய்தி என்றும் சொல்வீங்க. ஏன்னா நீங்க இந்த உபத்திர காலத்தில் இங்க சிக்கிக்கொள்ள விரும்புவது இல்ல. அது ஏன்னு மறுபடியும் சொல்லுங்க.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**...சரி, ஏன்னா இப்ப எல்லாமே தவறாக நடந்து கொண்டு இருக்கிறது. ஜனங்கள் மரிக்கிறார்கள்; படைகள் முன்னேறி போகுது; உலகத்தில் யுத்தம் உண்டாகுது; தேவன் உலகளாவிய ஒரு நியாயத்தீர்ப்பை உலகத்தின் மீது கட்டவிழ்த்து இருக்கிறார். மனிதர்களுடைய இருதயமும் கடினமாக துவங்கிவிட்டது. தேவன் இல்லை என்பது போலானதா." தேவனே சொல்லியிருக்கிறார், "இந்த பூமியின் மீது இருந்து என்னுடைய பாதுகாக்கும் கரத்தை விளக்குகிறேன், மனிதர்களின் கடினம் வெளிப்படும்படி அதற்கு இடமளித்து அதை அனுமதிக்கிறேன்." நம்முடைய நாட்களிலேயே அதனுடைய சில பிம்பங்களை நாம் பார்த்துகொண்டு தான் இருக்கிறோம். இப்ப, இந்த உபத்திரத்தின் காலத்தில், நாம கட்டுபாட்டில் இருந்து வெளியேற்றப்படுவோம். இப்ப, நமக்கு சாக்கு சொல்ல வழியில்லை, "நான் இப்ப கைவிடப்பட்டவனாக இருக்க விரும்புகிறேன் அப்பறமா இரட்சிப்பை ஏற்றுகொள்கிறேன் என்று சொல்ல முடியாது. சமாதானமும் செழிப்பும் இருக்கிற இந்த காலத்தில் கிறிஸ்துவிடம்

வருவதற்கு தயங்கிடுவோம் என்றால், உங்களுடைய ஜீவனை விட்டால் கூட அவரிடம் வருவதற்கு உங்களுக்கு சமயம் கிடைக்காமல் போகும். அவருக்காக வாழாம அவருக்காக மரிக்கவும் தயார் என்று சொல்வதில் எந்தவித பலனும் கிடையாது என்பது உண்மை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, அந்த காலத்தில் எத்தனை பேர் கிறிஸ்தவர்களுக்கு எதிராக எழும்புவார்கள் என்று சொல்ல முடியுமா?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**..முழு உலகமும் எழும்பும், எப்படி இருக்குன்னுனா, விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாமே எதிராக திரும்புவது போலிருக்கும். இப்ப, இது இதுவரை நாம பார்க்காத ஒரு கேள்வியை முன்பாக நிறுத்தும், "உபத்திரவ காலத்தின் போது யாராவது இரட்சிக்கபடுவதற்கு வாய்ப்புகள் இருக்கிறதா?"

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதை பற்றி நாம அப்பறம் பேச இருக்கிறோம். ஆனா இப்ப ஆறாவது முத்திரையோடு முடித்திடலாம்.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...சரி. இந்த காரியங்கள் எல்லாம் பூமியில் நடந்துகொண்டு இருக்கும்போது ஆறாவது முத்திரை வெளிப்படும். படர்ந்த ஒரு பூமியதிர்ச்சி உண்டாகும், பூலோகத்தையே அசைக்க கூடியதாக இருக்கும். எல்லா இடங்களிலும் இருக்கும் ஜனங்க ஒளிந்துகொள்ள இடம் தேடுவார்கள், வேதம் சொல்கிறது, சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரின் கோபாக்கினை உண்டாகும்,

ஆட்டுக்குட்டியானவரின் கோபாக்கினை. நிச்சயமா எல்லாமே அஸ்திபாரம் இல்லாம தத்தளிக்கும். அது மட்டுமில்ல இதோட கூட, வேதம் சொல்கிறது, வானத்தின் நட்சத்திரங்கள் பூமியின் மீது விழுகுமாம். இப்ப, இதுவந்து உண்மையாக வானத்தில் இருக்கிற நட்சத்திரங்களை பற்றி சொல்லவில்லை, பீட்டல் ஜூஸ் போன்ற நட்சத்திரங்கள் அல்ல. ஆனா இது விண்கற்கள் மற்றும் எரிகற்களை பற்றி கூறுகிறது, அப்படிப்பட்டவைகள் பூமியின் மீது விழ ஆரம்பிக்கும். இன்றைக்கு உலகத்தில் நமக்கு தெரிந்த தனது நிலைகளில் இருக்கிற அனைத்தும் நகர்ந்து தன்னிலையை இழந்து தத்தளிக்கும் சூழ்நிலை உருவாக போகிறது. அந்த நாட்களில் மறைவான இடத்தை தேடி மக்கள் ஓடுவார்கள். இது பூமியின் மீது வரப்போகிற இணையற்ற நியாயத்தீர்ப்பாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். ஆறாம் அதிகாரத்தின் கடைசி வசனம் சொல்கிறது, "அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலை நிற்க கூடும்? (வசனம் 17) இந்த வசனத்தின் அடிப்படையில் சிலர் இதுதான் அந்த நல் என்கின்றனர், அதற்கு பிறகு, உபத்திரவ காலம் துவங்கிடும் என்கின்றனர். முதல் ஆறு முத்திரை, இங்க ஏழு இருக்குது, இவை அனைத்தும் சாத்தானால் உண்டாக போகும் இடையூறுகள். இவை தேவனால் உண்டாவது இல்லை. அதை நீங்க எப்படி சொல்ல முடியும்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**...ஆமா, இதை, தான் அநேகர், எடுத்துகொள்ளப்படுதலின் கோபாக்கினையின் முந்தைய கண்ணோட்டம் என்கின்றனர். இந்த ஆறாவது முத்திரையின் போதுதான் எடுத்துகொள்ளப்படுதல் உண்டாகும் என்கின்றனர் ஏன்னா இங்கதான் தேவனுடைய கோபாக்கினை துவங்குகிறதாம். இதிலிருந்துதான் விசுவாசிகள் விலக்கி காக்கப்படுவார்கள் என்று கூறுகிறார்கள். என்னுடைய கண்ணோட்டத்தின்படி இதுல இருக்கிற கடினம் என்னன்னு கேட்டா, இயேசுதான், அதாவது, ஆட்டுக்குட்டியானவர், தான் இந்த முத்திரைகளை உடைகிறார். அப்ப உபத்திரவ காலத்தின் நியாயத்தீர்ப்புகள் நெருங்கி கொண்டே இருக்கும், மேலும் உபத்திரவ காலத்தின் போது அது தீவிரம் அடைந்துகொண்டு தான் இருக்கும். இதை எல்லாரும் ஒத்துகொள்ளுகிறோம். ஆனா இயேசு தான இந்த முத்திரைகளை திறந்துகொண்டு இருக்கிறார். அப்ப முதல் நான்கு முத்திரைகளை திறக்கும்போது, ஐந்தாம் முத்திரையின் போதும் தேவனுடைய கோபாக்கினை தான் வெளிப்படுத்தப்படுகிறது அவர்தான் அது அத்தனையையும் திறக்கிறவராகவும் இருக்கிறார். இதை தொடர்ந்து பார்க்கும் போது தேவ கோபாக்கினைதானி என்று நேரடியாக தெரிகிறது, இதெல்லாம் தேவனுடைய கோபாக்கினை இல்லை என்று எந்த கட்டத்திலும் தவிர்க்க முடியாத ஒன்றாக தான் தோன்றுகிறது. நாம இந்த கோபாக்கினையினின்று தப்பனும், இந்த பூமியின் மீது வர இருக்கும் சோதனை காலத்திற்கு உன்னை

விலக்குவேன், என்று சொல்லபட்டு இருப்பதால இது நிச்சயமா உபத்திரவ காலம் துவங்குவதற்கு முன்பு சம்பவிப்பதாக தான் இருக்கணும் அப்படித்தான் நடக்கும், இந்த ஏழு வருடங்கள் துவங்குவதற்கு முன்பாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, ஆல்ரைட். அடுத்த வாரம், தவறாம பாருங்கள். அடுத்த வாரம் இந்த இக்கட்டான சூழ்நிலைகள் மத்தியில் தேவன் என்ன செய்ய போகிறார் என்பதை பற்றி தான் பார்க்க இருக்கிறோம் அடிபடையில், பூமியின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரப்போகிற நாட்கள் வரும். தேவன் இன்னும் இரக்கத்தோடு தனது லட்சத்தி நாற்பதினாயிரம் சாட்சிகளுக்கு காத்திருக்கிறார், சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படியாக அவர் தெரிந்துகொள்ளும் மக்கள். இவர் எல்லாம் யார் என்று பார்க்க இருக்கிறோம், என்ன செய்வார்கள், தேவன் எவ்வளவு வல்லமையை கொடுக்கிறார், என்ன நடக்குதுன்னு பார்க்கலாம், சரியா? அடுத்த வாரம் இதை துவங்கிடலாம். தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்?

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.